[4th February 1966

have approved, in principle, the proposal of the Board of Revenue for raising the status of Peravurani Sub-taluk, from that of dependent to independent Sub-taluk.

There is at present no proposal for upgrading the Gandharvakottai Sub-taluk into a Taluk.

திரு. ஆ. துரையரசன் : தலைவர் அவர்களே, கந்தர்வகோட்டை துணைத் தாலுக்காவைத் தாலுக்காவாக ஆக்கவேண்டும் என்று பொது மக்கள் விண்ணப்பங்கள் அனுப்புவது ஒரு புறமிருக்க, பஞ்சாயத்துக் கூட்டு மன்றத் தீர்மானம் ஏதாவது அரசினருக்குக் கிடைத்ததா என்பதை அறியலாமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : முதல் கேள்விக்குப் பதில் சொல்லக்கூடிய முறையில், அது பரிசீலனை செய்யப்பட்டு அது இப்பொழுது அவசியம் இல்லை என்று அரசாங்கம் கருதுவதாக நான் சொன்னேன்.

Vacancies of Assistant Surgeons

* 97 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that all future vacancies in the cadre of Assistant Surgeons are to be reserved for those who join the Defence Services during the present Emergency; and

(*b*) if so, the details of the terms of service that would be offered to them ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) Yes, Sir.

(*b*) The doctors who join the Defence Forces in connection with the Emergency will be recruited to the reserved vacancies on demobilisation through the Madras Public Service Commission. Due weightage will be given for the service rendered by them in the Army for the purposes of fixation of seniority and fixation of pay in the posts of Assistant Surgeons in the Madras Medical Service.

திரு. வை. சங்கரன் : இப்பொழுது ராணுவத்தில் மருத்துவ சேவை செய்துகொண்டிருப்பவர்களுக்கு அரசாங்க சர்விசில் முதல் இடம் கொடுக்கப்படும் என்றாலும், இனி அஸிஸ்டென்ட் ஸர்ஜன் வேலைக்கு நபர்களைத் தெரிந்தெடுக்கும் போதும், இராணுவ சர்வீஸ் செய்தவர்களுக்குத்தான் அந்த வேலை என்று விதி செய்யப்படுமா ? அதாவது, இராணுவ சேவை செய்துவிட்டுத் திரும்புபவர்களுக்கு அஸிஸ்டென்ட் ஸர்ஜன் வேலை கொடுப்பது தவிர, இனி அஸிஸ்டென்ட் சர்ஜன் வேலைக்கு நபர்களை எடுக்கும்போதும், முதலில் இராணுவ சர்வீஸ் ஓரளவு செய்திருக்கவேண்டும்; அப்படிச் செய்தவர்களுக்குத்தான் அஸிஸ்டென்ட் சர்ஜன் வேலை கொடுப்போம் என்று விதியை மாற்றியமைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

4th February 1966]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இராணுவ சேவை செய்திருந்தால் அஸிஸ்டென்ட் ஸர்ஜன் வேலை கொடுக்க வேண்டும் என்ற விதி ஒன்றும் இல்லை. ஏற்கனவே இராணுவ சர்வீஸுக்குப் போயிருக்கிறவர்களுக்கு **Certain posts** ரிசர்வ் பண்ணி வைத்திருக்கிறார்கள். 9-30 a.m.

திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத்தலைவர் அவர்களே, ராணுவ சேவை செய்து விட்டு திரும்பி வருகிற டாக்டர்களுக்கு சம்பளத்தில் பிரத்தியேகமாக சலுகை அளிக்கிற திட்டமிருக்கிறதா? இல்லையென்றால் இனி ஏற்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ராணுவ சேவை செய்கிறவர்களுக்கு அங்கு கொடுக்கப்படுகிற சலுகைகள் இங்கு அஸிஸ்டன்ட் சர்ஜன்களுக்கு கொடுப்பதே அதிகம்தான். அவர்கள் ராணுவ சேவை செய்து விட்டு டிமாபிலைஸ் செய்து இங்கு திரும்பி வரும்போது அவர்கள் சர்விஸ், ஸ்கேல்ஸ் ஆஃப் பே, எல்லாவற்றையும் வைத்து பரிசீலனை செய்து இங்கு எவ்வளவு கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுப்பார்கள்.

திரு. வை. சங்கரன்: இனியாவது அஸிஸ்டன்ட் சர்ஜன் வேலைக்கு எடுப்பதற்கு முன்னால் குறிப்பிட்ட அளவு, இரண்டு மூன்று ஆண்டுகளாவது ராணுவ சேவை செய்திருக்கவேண்டுமென்று ஒரு விதியை ஏற்படுத்த அரசாங்கம் உத்தேசிக்குமா?

கனம் சபாநாயகர்: அந்த மாதிரி கண்டிஷன் இல்லை என்று கனம் அமைச்சர் சொல்லி விட்டார்களே. கட்டாயமாக அவ்விதம் சேவை செய்திருக்கவேண்டுமென்று சொல்ல முடியாது என்று சொல்லிவிட்டார்களே?

திரு. மீ. கலியாணசுந்தரம்: நம் ராஜ்யத்திலிருந்து எத்தனை டாக்டர்கள் ராணுவ சேவைக்குச் சென்றிருக்கிறார்கள்? எனக்குத் தெரிந்த வரையில் நம் ராஜ்யத்திலிருந்து அதிகமாகச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் திரும்பி வரும்போது பூராப் பொறுப்பையும் நம் அரசாங்கமே ஏற்றுக்கொள்ளவேண்டுமானால் இனி படித்து வருகிறவர்களின் நலன் பாதிக்கப்படாதா? மற்ற மாநிலங்களும் இந்தச் சுமையைக் கொஞ்சம் சுமக்கக் கூடாதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: நம் மாநிலத்தில் இருந்து சென்றிருக்கிற அத்தனை டாக்டர்களையும் நாம்தான் அப்ஸார்ப் செய்ய வேண்டியிருக்கும். நம் அரசாங்கம் மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறது, அவர்களை இன்டர் சேஞ்ச் செய்யவேண்டுமென்று. அதுபற்றி இன்னும் முடிவு எடுக்கவில்லை. அவர்கள் திரும்பி வந்தால் நம் சர்வீஸில் 50 சத விகிதம் ரிசர்வ் போஸ்ட்ஸ் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. சா. கணேசன்: இப்போது தமிழகத்தில் இருக்கிற பல் வேறு ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் இல்லை என்ற குறையும் அல்லது முறையீடும் இருந்து கொண்டிருக்கிற நிலையில் மிலிட்டரி சர்வீசிலிருந்து வருகிறவர்களுக்கும், புதிதாக பயிற்சி பெற்று

[4th February 1966

வருகிறவர்களுக்கும் இன்னும் அதிகமாக நம் மாநிலத்தில் இடம் இருக்கும் என்பது அரசாங்கத்தின் கருத்தா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அப்படித்தான், பல மருத்துவ மனைகளில் டாக்டர்கள் இல்லாத குறைகளை எல்லாம் உத்தேசித்துத்தான் அதிகப்படியாக போஸ்ட்களை சாங்ஷன் செய்திருக்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 250 முதல் 300 க்கு குறையாமல் டாக்டர் பரீட்சையில் தேறி வருகிறார்கள். அவர்களை போஸ்ட் செய்ய டாக்டர்கள் இல்லாத மருத்துவ மனைகளில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கனம் சபாநாயகர்: இடம் இருக்கிறது. ஆனால், இவர்கள் போக மறுக்கிறார்கள்; அப்படியே போஸ்ட் செய்தாலும் ரிஸைன் செய்து விட்டு அங்கேயே இருந்து விடுகிறார்கள்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, டாக்டர்களுக்குப் படித்து வருகிறவர்களுக்கு கட்டாய ராணுவ சேவை செய்யவேண்டுமென்ற விதி இப்போது இல்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். கட்டாய ராணுவ சேவை செய்ய வேண்டுமென்ற விதி இல்லாவிட்டாலும் கட்டாயமாக ப்ரைமரி ஹெல்த் சென்டர்களில் பணி புரியவேண்டுமென்று விதி இருக்கிறதா? அப்படி இல்லை என்றால் அந்த விதி சேர்க்கப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கட்டாய விதிகள் பல போடப்பட்டிருக்கின்றன. ஆனால், கட்டாயப்படுத்துவது கடினம். 1½ ஆண்டுகள் ப்ரைமரி ஹெல்த் சென்டரில் சேவை செய்வதற்கும், 6 மாத காலம் பப்ளிக் ஹெல்த் ட்ரெயினிங் என்று வைத்து இரண்டு ஆண்டுகளாவது இப்படி செய்யவேண்டுமென்று ஏற்கனவே உத்தரவு இருக்கிறது.

திரு. வை. சங்கரன்: சண்டையேற்பட்டபோது மத்திய சர்க்காரிலிருந்து நம் ராஜ்ய சர்க்காரிடம் army க்கு எவ்வளவு டாக்டர்கள் தேவை என்று அவர்கள் கேட்டிருந்தார்கள்? அதற்கு எவ்வளவு பேர்கள் மனுச் செய்து கொண்டார்கள்? எவ்வளவு பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: 1962-ல் சீன ஆக்கிரமிப்பு ஏற்பட்டபோது 400 டாக்டர்கள் கேட்டிருந்தார்கள். அப்போது நம் மாநிலத்திலிருந்து ஏறத்தாழ 50 டாக்டர்கள் அனுப்பப்பட்டார்கள். இப்போது பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஏற்பட்டபோது அவர்கள் அதிகப்படியாக கேட்கவில்லை. மாநில வாரியாகப் பிரித்து ஒரு பர்சன்டேஜ் ஃபிக்ஸ் செய்து நம் மாநிலத்தில் இருந்து உடனடியாக 25 டாக்டர்களை அனுப்பச் சொல்லியிருந்தார்கள். பதினெட்டு டாக்டர்கள் ஏற்கனவே சென்றிருக்கிறார்கள், செப்டம்பர் வரையில். அதன் பிறகு டாக்டர்களின் எண்ணிக்கையைப்பற்றிய தகவல் என்னிடம் இல்லை.

4th February 1966]

திரு. சா. கணேசன் : மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணாக்கர்களைப் பொறுக்கி எடுக்கும்போதே குறைந்தபட்சம் இவ்வளவு ஆண்டுகள் பொது ஆஸ்பத்திரிகளில் அவர்கள் சேவை புரிய வேண்டுமென்று ஒரு கட்டாய விதியைப் போட்டு அதன் பிறகு மாணாக்கர்களை பொறுக்குவதாக இருந்தால் இன்னும் அதிகப் பயன்கிடைக்கும் என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதா? அப்படியானால் அதன் மீது என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள உத்தேசம் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இப்போது ஹௌஸ் சர்ஜன்ஸி பாஸ் செய்த பிறகு இவ்வளவு ஆண்டுகாலம் செய்ய வேண்டுமென்று இருக்கிறது. கட்டாயப்படுத்துவது இயலாது.

The rule is there, that they should serve in the Primary Health Centres but there is no binding agreement between the doctors and the Government.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சர்க்கார் வேலை என்றால் இதை இன்ஸிஸ்ட் செய்யலாம். சர்க்கார் வேலை இல்லாமல் ப்ரைவேட் ப்ராக்டீஸ்க்கு சென்று விடுகிறார்கள். முதலில் ஒத்துக்கொள் கிறார்கள். பட்டம் பெறுகிறார்கள். பின்னர் வரவில்லை என்று சொன்னால் என்ன செய்யமுடியும்? அதுதான் யோசிக்க வேண்டியிருக்கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, ஐந்து ஆண்டுகள் படித்து முடித்த பிறகு ஒரு ஆண்டு அல்லது இரண்டு ஆண்டுகள் ப்ரைமரி ஹெல்த் சென்டர்களில் பணி புரிந்த பிறகுதான் எம்.பி.பி.எஸ். பட்டம் வழங்கப்படும் என்ற முறையில் கட்டுப்படுத்த வழிவகைகள் ஏற்படுத்தப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எம்.பி.பி.எஸ். பட்டம் வழங்க வில்லை என்று சொன்னால் அவர்களை வேலையில் எடுத்துக் கொள்ள முடியாது.

திரு. எஸ். முருகையன் : இரண்டு ஆண்டுகள் ப்ரைமரி ஹெல்த் சென்டரில் வேலை செய்யவேண்டுமென்று தெரியப்படுத்தியிருப்ப தாகச் சொன்னார்கள். தொர்ந்து ப்ரைமரி ஹெல்த் சென்டரி லேயே வேலை செய்கிறவர்களுக்கு விசேஷச் சலுகை ஏதாவது அளிக்கப்படுமா? அப்படியானால் இதற்கு பலர் முன்வருவார்கள் அல்லவா? இதைப் புனர் பரிசீலனை செய்து இது போன்ற ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தொடர்ந்து ப்ரைமரி ஹெல்த் சென்டரில் எந்த டாக்டரும் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் இருக்க, ஏன்; ஒரு வருடமே இருந்து பணியாற்றுவது என்பது கஷ்டமாக இருக்கிறது. தொடர்ந்து எவ்வளவு ஆண்டுகள் இருக்கிறார்கள் என்பதுபற்றி என்னிடம் தகவல் இல்லை. தனிப் பட்ட சலுகை கொடுக்கப்பட மாட்டாது.